வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.11.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 309 பக்கங்கள் : 12




# திட்டமிட்ட தினத்திலேயே பாராளுமன்றத் தேர்தல்

## எதிரான மனு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

கொழும்பு, நவம்பர் 05

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுக்காது உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது. 11

# வேறு கட்சியினருக்கு அமைச்சு பதவி இல்லை!

## முல்லைத்தீவில் பிரதமர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, நவ. 05

தேசிய மக்கள் சக்தியைத் தவிர்ந்த வேறு கட்சியினர் எவருக்கும் அமைச்சு பதவிகளை வழங்கமாட்டோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி அநுரகுமார 11

# மன்னார் சென்றார் பிரதமர் மக்கள்மீது கடும் சோதனை

மன்னார், நவ. 05

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று மன்னாரில் பங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று திங்கட்கிழமை பகல் மன்னாருக்கு சென்றார். தேசிய மக்கள் சக்தி சார்பில் வன்னி மாவட்டத்தில் 11

# இராணுவ முகாம்களை வடக்கில் நீக்கமுடியாது!

## பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, நவ. 05

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல் தீர்மானிக்க முடியாது. அதற்குரிய வழிமுறைகளை பின்பற்றி அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்திய பின்னரே இது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியும் - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேணல் நளின் ஹேரத் 11

# காணிகளை விடுவிக்குமாறு பிரதமரிடம் மக்கள் மகஜர்!

முல்லைத்தீவு, நவ. 05

படைகளின் வசமுள்ள தமது காணிகளை தங்களிடமே வழங்குமாறு கோரி பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கேப்பாபிலவு மக்கள் மனு ஒன்றை கையளித்தனர்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான பரப்புரை கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்திருந்தார்.

புதுக்குடியிருப்பில் நேற்று நடந்த பரப்புரையில் பங்கேற்ற பிரதமரை நேரில் சந்தித்த கேப்பாபிலவு மக்கள் படைகளின் வசமுள்ள தமது 11




# ஓ.எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, நவ. 05

2024ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் விண்ணப்பிக்க முடியும். எதிர்வரும் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. 11








# மின் கட்டண குறைப்பு போதுமானதாக இல்லை

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, நவ. 05

மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள கட்டணக் குறைப்பு போதுமானதாக இல்லை என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டண திருத்தம் தொடர்பான 11




# இணையம் மூலம் கடவுச்சீட்டு நாளை அறிமுகமாகின்றது!

கொழும்பு, நவ. 05

கடவுச்சீட்டை பெறுவதற்கு இணையம் மூலம் விண்ணப்பிக்கும் முறைமை நாளை புதன்கிழமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஏற்கனவே இந்தப் பத்தியில் எழுதிய விடயம்தான். ஆனாலும் அந்த விடயம் இப்போது பொலிஸ் முறைப்பாடு வரை வந்திருப்பதால் அதனை மீண்டும் எழுதவேண்டியிருக்கின்றது.

வன்னி மாவட்ட முன்னாள் எம். பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் மதுபானசாலைக்கு அனுமதி எடுத்துக் கொடுப்பதற்காக ஒருவருக்கு சிபாரிசு செய்தாரென அவரின் கட்சியின் மற்றுமொரு முன்னாள் எம். பியான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்தை நிராகரித்துள்ள சார்ள்ஸ், அது குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் நண்பர் ஒருவர் தெரிவித்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில், பெற்றோல் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு விரும்பிய வர்த்தகர் ஒருவர், அதற்காக முயற்சி செய்தபோது, அந்தத் துறை சார்ந்த அமைச்சருக்கு வடக்கு எம். பி. ஒருவர் நெருக்கமான நண்பர் என்பது தெரிய வந்திருக்கின்றது.

அந்த வர்த்தகரும் குறிப்பிட்ட அந்த எம். பியை அணுகி, அந்த அமைச்சருக்கு தன்னை சிபாரிசு செய்யுமாறு கேட்டிருக்கிறார்.

இவரும் தான் சொன்னால் அவர் உங்களுக்கு பெற்றோல் நிலையத்தை புதிதாகத் திறப்பதற்கு அனுமதி தருவார் என்றால் அவருக்கு உங்களை அறிமுகம் செய்து வைப்பதில் தனக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று கூறியதுடன், அவர் முன்னிலையிலேயே அந்த அமைச்சருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, "எனது நண்பர் ஒருவர் பெற்றோல் நிலையம் ஒன்றைத் திறக்க விரும்புகின்றார், என்ன "போர்மாலிற்றிஸ்" இருக்கிறதோ அதை அவர் செய்து தருவார். முடிந்தால் அவருக்கு உதவுங்கள்" என்றிருக்கிறார்.

அமைச்சரும் அந்த வர்த்தகருக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்க இவர் கொழும்பு சென்று அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்.

பெற்றோல் நிலையம் ஒன்றை அமைப்பதெனில், அதற்காக பல கட்ட ஏற்பாடுகளை பூர்த்தி செய்யவேண்டியிருக்கும். அதற்கான இடம் பொருத்தமானதா என்பதை முதலில் பரிசோதித்து, பின்னர் அற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த பின்னர், அனுமதி கிடைக்கும் இறுதி சந்தர்ப்பத்தில் - அமைச்சருக்கு கொடுக்கவேண்டியதை கொடுத்து அனுமதியை பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர், இவர் கொடுத்த பணத்தில் சில இலட்சங்களை திரும்பிக் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு அனுமதி பெறுவதற்காக ஒருவரை அறிமுகம் செய்கின்றவருக்கு வழக்கமாக சில இலட்சங்களை கொடுப்பதுண்டு. ஆனால், உங்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் அப்படி எதனையும் வாங்கப் போவதில்லை என்பதால் அதனை உங்களுக்கே தருகிறேன் என்றிருக்கிறார்.

அதாவது, அந்த வர்த்தகருக்கு அமைச்சரை அறிமுகம் செய்துவைத்த நமது அந்த எம். பி. அப்படியொரு நேர்மையானவர் என்பதைக்கூட இந்த வர்த்தகர் பின்னர்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்.

இந்த சம்பவத்தை அந்த வர்த்தகரே எனது நண்பர் ஒருவருக்கு கூறினார் என்று, நண்பர் ஒருவர் ஒருதடவை கூறியதுதான் இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

ஒருவர் பெற்றோல் நிலையம் திறக்கவேண்டும் என்று நினைப்பதும் இன்னுமொருவர் மதுபான விற்பனை நிலையம் ஒன்றை திறக்கவேண்டும் என்று நினைப்பதும் இரண்டு வகையான வர்த்தகம்தான்.

கிளிநொச்சியில், கசிப்பு உற்பத்தி அதிகரிப்பதற்குக் காரணம், அங்கே மதுபான விற்பனை நிலையங்கள் எதுவும் இல்லாததுதான் என்றும் எனவே, அங்கே மதுபான விற்பனை நிலையங்களை திறக்க வேண்டும் எனவும் அந்த மாவட்ட எம். பி. ஒருவர் யுத்தம் முடிந்து சில வருடங்களின் பின்னர் பகிரங்கமாகவே அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆக, ஒரு வர்த்தகர் மதுபான சாலையை திறந்து வியாபாரம் செய்ய விரும்பினால், அதற்கு சிபாரிசு செய்வதில் என்ன தவறிருக்கின்றது என்பது தெரியவில்லை. அவர் சட்டத்துக்கு மாறாக - மதுபானசாலையை திறப்பதற்குரிய நியமங்களுக்கு மாறாக - உதாரணமாக பாடசாலைகள், ஆலயங்களுக்கு அருகே இல்லாமல் அமைப்பது தவறான ஒன்றல்லவே. எதற்காக இவர்கள் குய்யோமுறையோ என்று கூக்குரலிடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

அவ்வாறு அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கு அவர் கையூட்டு வாங்கியிருந்தாலோ அல்லது நியமங்களுக்கு மாறாக அதனை திறக்க அனுமதிக்குமாறு தமது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியிருந்தாலோ அது தவறானதுதான். அதற்காக அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று எதற்காக வாதிடுகிறார்கள் என்பது தெரியவில்லை. சார்ள்ஸ நிர்மலநாதனும் தான் சிபாரிசு கடிதம் கொடுக்கவில்லை என்றுதான் மறுத்திருக்கிறாரே தவிர சிபாரிசு செய்யவில்லை என்று மறுத்தாராவென தெரியவில்லை.

இத்தனைக்கும் இன்னுமொருவர், சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, அதற்காகவே சிலருடன் கைகோத்துக்கொண்டு அரசியல் செய்கிறார் எனவும் பேசப்படுகின்றது. தேர்தல் நெருங்கும் நேரத்தில் இவர்களின் சிபாரிசுக் கடிதத்தை வெளியிடப்போவதாக சிலர் அச்சுறுத்தி வருகின்றனர் எனவும் பேசப்படுகின்றது.

**- ஊர்க்குருவி.**

# 'பிரபஞ்ச நேசம்' இயற்கை நேய செயலணியின் செயலமர்வு!

யாழ்ப்பாணம், நவ. 05

காவேரி கலா மன்றத்தின் ' 'பிரபஞ்ச நேசம்' இயற்கை நேய செயலணியின் நான்காவது செயலமர்வு நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இந்த செயலர்வில் கால நிலை மாற்றமும் உயிரியல் பல்வகைமையும் என்ற தொனிப்பொருளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

செயலமர்வின் வளவாளராக காவேரி கலா மன்றத்தின் நிர்வாக இயக்குநர் யோசாவா செயல்பட்டார்.



இந்த செயலமர்வில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அநுராதபுரம் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இயற்கை நேய செயலணியின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள்.

செயலமர்வின் முடிவில், பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(ஐ-05)

## யாழ். நகரில் விபத்து ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம் நகரின் சத்திர சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்ற குறித்த நபர் தவறி கீழே விழுந்துள்ளார். அந்தச் சமயம் வீதியால் வந்த பவுஸர் ஒன்று அவரின் கால்களின் மீது ஏறியுள்ளது. இதில் அவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த நபர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 'வாழ்வகம்' நிறுவனத்தால் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 05


வாழ்வகம் நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை 2025ஆம் கல்வியாண்டில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும், கல்விக்கான அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். மேலும், மேலதிக வகுப்புக்கள், கணினி கற்கைகள், கவின் கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதாரம், மருத்துவம், விளையாட்டு வசதிகள் என்பனவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பிந்தாமல் "தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்" எனும் முகவரியுடன் நேரடியாகவோ அல்லது 021 224 0146 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் எப்பாகத்திலுமிருந்தும் புதிய மாணவர் அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசியலில் பெண் தலைமை; யாழில் விழிப்புணர்வு நாடகம்



யாழ்ப்பாணம், நவ. 05

"பெண்களின் தலைமைத்துவத்தை அரசியலில் மேம்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மகளிர் அபிவிருத்தி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது.

இந்த நாடக ஆற்றுகை இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு சந்தியில் முற்பகல் 10 மணிக்கு முதலாவது நாடகத்தையும், இரண்டாவது நாடகத்தை மாஞ்சோலை சந்தியிலும் நடைபெறும்.

நாளை மறுதினம் புதன் கிழமை கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் பிற்பகலில் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து 7ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் நகர பகுதி பேருந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில் சிரமதானம்!



மன்னார், நவ. 05

மன்னார் - ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதையடுத்து, ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டு குழுவால் சிரமதான பணிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் தூவி, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணிகள் ஆரம்பமாகின.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.11.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# காட்சிகூட காட்டத் தெரியாத கட்சி

இந்த வருடம் ஜனவரியில் தலைவரைத் தெரிவு செய்வதற்கு பொதுச்சபையில் நடந்த தேர்தலுக்கு பிறகு இலங்கை தமிழ் அரசு கட்சி இரு முகாம்களாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரனையும் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனையும் இரு துருவங்களாகக் கொண்டே அந்த முகாம்கள் அமைந்திருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும்.

தலைவர் பதவிக்கான தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்றபோதிலும் நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்குகள் காரணமாக அவரால் அந்தப் பதவியை இன்று வரை பொறுப்பேற்க முடியாமல் இருக்கிறது. இதேவேளை, சுமந்திரன் மத்திய செயல்குழுவில் தனக்கு இருக்கும் ஆதரவை அனுகூலமாக பயன்படுத்திக் கொண்டு தற்போது தமிழ் அரசு கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

மத்திய செயல்குழுவை கூட்டுவது தொடக்கம் தேர்தல்களில் வேட்பாளர்களை நியமிப்பது வரை இன்று சகல விடயங்களையும் தீர்மானிக்கும் ஒரு வலிமையான நிலையில் சுமந்திரன் இருக்கிறார். கட்சியின் தலைவராக இன்னமும் தொடர்கிறாரென நம்பப்படும் மாவை சேனாதிராசாவும் சிறீதரனும் தங்களின் விருப்பத்தின் பிரகாரம் மாவட்ட வேட்பாளர்கள் பட்டியலில் ஒருவரைக்கூட இடம்பெறச்செய்ய முடியாதவர்களாக கையறு நிலையில் நிற்பது பரிதாபம்.

தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றவர் எதையும் செய்ய முடியாமல் இருக்க, தோல்வி கண்டவர் கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் (தற்காலிகமாகவேனும்) எவ்வாறு கொண்டுவரக்கூடியதாக இருந்தது என்பதற்கு பதில் கூறவேண்டிய கடப்பாடு வேறு யாருக்கும் அல்ல மாவை சேனாதிராசாவுக்கும் சிறீதரனுக்குமே பெருமளவுக்கு இருக்கிறது.

இந்த விடயங்களை இங்கு கூறுவதற்கு ஒரு காரணம் பாரம்பரியமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்துவந்த - இரு மாகாணங்களிலும் பரந்தளவில் தமிழ் மக்களின் ஆதரவைக் கொண்டிருந்த ஓர் அரசியல் இயக்கத்தின் கதி பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு எவ்வாறு அமையப்போகிறது என்ற அக்கறையேயாகும். அடுத்த பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் எந்தக் கோலத்தில் அமையப்போகிறது என்ற ஏக்கம் அடுத்த காரணம்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ உள்நாட்டு போரின் முடிவுக்கு பின்னரான சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் உருப்படியான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராவிட்டால் எந்தவொரு தமிழ்க் கட்சியாலும் பயனுறுதியுடைய செயல்பாட்டை முன்னெடுக்க முடியாத நிலையே இன்றும் காணப்படுகிறது. பாராளுமன்றத்துக்கு வெளியில் ஜனநாயக ரீதியில் என்றாலும், உறுதியான அரசியல் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கக்கூடிய அரசியல் துணிவாற்றலோ அல்லது வல்லமையோ அல்லது அர்ப்பணிப்பு சிந்தையோ இன்றைய தமிழ்க் கட்சிகளில் எந்த ஒன்றிடமும் இல்லை. வெறுமனே மக்களை உணர்ச்சி வசப்படுத்த பழைய சுலோகங்களை உச்சரிக்க மாத்திரமே அவற்றின் தலைவர்களுக்கு தெரியும்.

அதனால், தமிழ் அரசு கட்சி உருப்படியான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு தங்களது இன்றைய செயல்பாடுகள் எந்தளவுக்கு உதவும் என்பது குறித்து அதன் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர் கிஞ்சித்தேனும் சிந்தித்துப் பார்க்கிறார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரில் தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் அரசு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட நிகழ்வில் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளர் சிறீதரனை காணவில்லை. ஆனால், அதற்கு முதல் சேனாதிராசாவிடம் விஞ்ஞாபனம் கையளிக்கப்பட்டபோது அங்கு அவர் நின்றார். தனது செயலுக்கான காரணத்தை இதுவரையில் அவர் மக்கள் அறிய கூறவில்லை. அந்த செயல் மூலமாக சிறீதரன் தமிழ் அரசு கட்சியின் தொண்டர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கும் கூறுகின்ற செய்திதான் என்ன?

கட்சிக்குள் கூர்மையான முரண்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மை. தலைவர்களுக்கு இடையில் தன்னகம்பாவ போட்டி நிலவுகின்றது என்பதும் உண்மை. முரண்பாடுகளுக்கு கோட்பாட்டு வேறுபாடுகளையும் விட வேறுகாரணங்களே அதிகம். ஆனால், குறைந்தபட்சம் தேர்தலில் கட்சியின் நலன்களுக்காகவேனும் ஒன்றுபட்டு நிற்பது போன்ற ஒரு "காட்சியைக்"கூட காட்ட முடியவில்லை என்றால் தமிழ் மக்கள் தமிழ் அரசு கட்சியை எதற்காக தேர்தலில் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்பதை வாக்களிப்புக்கு இன்னமும் பத்து நாட்கள்கூட இல்லாத நிலையிலாவது அதன் தலைவர்கள் கூறுவார்களா?

கட்சியின் பாரம்பரிய பெருமையை நெடுகவும் பேசிக்கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. தென்னிலங்கையின் பாரம்பரிய கட்சிகளுக்கு நேர்ந்திருக்கும் கதியை தமிழ் அரசு கட்சி மாத்திரமல்ல சகல தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."
- அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)



# தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகள் தெரிவத்தாட்சி அலுவலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும்

சுதந்திரமான தேர்தலுக்கான ஆசியன் வலையமைப்பு நேற்று யாழ். மாவட்ட தெரி வத்தாட்சி அலுவலரை சந்தித்தது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாராளுமன்றத் தேர்தல் முன்னாயத்த செயல்பாடுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.



இச்சந்திப்பில் சுதந்திரமான தேர்தலுக்கான ஆசியன் வலையமைப்பு தேர்தல் கண்காணிப்பு குழுவின் சர்வதேச கண்காணிப்பாளர் ஹெறி விபோவோ றிக்சாக் சொனா, கலாராஜ் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ-05)


# ஆனைக்கோட்டையில் வீட்டின்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 05

மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த நால்வர் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிறிஸ்துராஜா கொலின்ஸ் என்பவரின் வீடே தாக்கப்பட்டது. வீட்டின் யன்னல் கண்ணாடி களை உடைத்ததுடன், வீட்டில் நிறுத்தப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப் படுத்தி விட்டு தாக்குதல்தாரிகள் தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-05)



# வெள்ளியன்று முல்லைத்தீவில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு, நவ. 05

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கான நடமாடும் சேவை வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மு. ப 10.00 தொடக்கம் - பி. ப 4.00 மணி வரை இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் குறைகளை கேட்டறிந்து உரிய தீர்வுகளை விரைவாக வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகிறது.


கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் அதிகளவான பொதுமக்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.

இதேபோல் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள நடமாடும் சேவைகளுக்கான திகதிகள் பின்னர் அறியத் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும்.

**ரிஷபம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீரகள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்திகள் வரும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடிவருவார்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங் குங்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புது வேலை அமையும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சொத்துப்பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு.

**துலாம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். விலகி சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். லாபம் கணிசமாக உயரும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும்.

**தனுசு**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். உடல் நலம் பாதிக்கும். சொந்த பந்தங்களுடன் மனத்தாங்கல் வந்துபோகும்.

**மகரம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரியமானவர்களுக்காக சில வற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். தாய்வழியில் ஒத்துழைப்பு இருக்கும்.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உடல் நலம் சீராகும். புதிய சலுகைகள் கிடைக்கும்.

# சுமந்திரனுக்கு எதிராக சாள்ஸ் முறைப்பாடு

மன்னார், நவ. 05

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், உண்மைக்குப் புறம்பாக தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் கருத்துகளை வெளியிட்டமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

மன்னாரிலுள்ள தமிழ் அரசு கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே சாள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மதுபானசாலைக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் அதை நான் வெளிப்படையாக ஒப்புக்கொண்டதாகவும் உண்மைக்குப் புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பு ஒன்றில் சுமந்திரன் கூறியிருந்தார்.

இந்த கருத்தை அவர் கூறிய சமயம் நான் இந்தியாவில் இருந்தமையால் மன்னார் வந்தவுடன் உண்மைக்கு புறம்பான கருத்தை வெளியிட்டமை தொடர்பில் நடவடிக்கை மேற் கொள்ளுமாறு பொலிஸ் நிலை யத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான உதவிகளை கோரிய போது அவர்களின் தேவைகளின் நிமித்தம் நான் அந்த சந்திப்புகளை மேற்கொள்வதற்கான உதவிகளை செய்து கொடுத்தேன். அவ்வாறு சந்தித்தவர்களில் தனிப்பட்ட பழக்கத்தின் காரணமாக யாரும் அந்த வாய்ப்பை பயன்பத்தி மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதியை பெற்றிருந்தால் நான் அதற்குப் பொறுப்பாக முடியாது என்றும் சாள்ஸ் நிர்மலநாதன் கூறினார். (எ)

# முகமாலையிலுள்ள சிவபுர வளாகத்தில் வரப்புயர மரநடுகையின் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 05

தமிழர்களின் புனித மாதமான நவம்பர் மாதத்தில் சூரிச் சிவன் கோவில் சைவத்தமிழ் சங்கத்தின் அன்பேசிவ இளம் தொண்டர் சபையின் நிதி அனுசரணையில் வரப்புயர மரநடுகையின் ஆரம்ப நிகழ்வு முகமாலையிலுள்ள சிவபுர வளாகத்தில் நடைபெற்றது.

இதேவேளை, வரப்புயர திட்டத்தின் கீழ் முகமாலை கிராம மக்களுக்கு மரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இக்கிராமத்தில் யுத்த காலத்தில் அதிக மரங்கள் அழிவுற்றன. அதனால் பயன்தரு மரங்களை மீண்டும் நாட்டுவதன் மூலம் கிராம மக்கள் முன்னேற்றத்தை



காண்பார்கள் என்ற நல்ல எண்ணத்துடன் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அன்பே சிவ தாயக இணைப்பாளர், நிர்வாகத்தினர், தொண்டர்கள், பணியாளர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்.

எதிர்வரும் நாட்களில் கிழக்கு மாகாணத்திலும் பின்னர் வடக்கு மாகாணத்திலும் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (எ)

# 23 வயது இளைஞன்மீது மர்ம நபர்கள் தாக்குதல்

## ஆபத்தான நிலையில் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், நவ. 05

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் கடற்றொழிலுக்காக வந்திருந்த இளைஞன் ஒருவர், ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

கண்ணகி நகர் விசுவமடுவைச் சேர்ந்த 23 வயது இளைஞனே இவ்வாறு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்.

கட்டைக்காடு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்ததாகவும் நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞன்மீது வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் தாக்கியதாகவும் இதனால் சுயநினைவிழந்து - விழுந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டு மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற் றப்பட்டார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பூநகரி பொலிஸ் பிரிவில் 80 கிலோ கேரள கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, நவ. 05

கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவில் 80 கிலோ கிராம் கேரள கஞ்சா நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்தல் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்பின் போதே கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சாவை பூநகரி பொலிஸார் ஊடக நீதி மன்றில் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்கும் முறைமை தொடர்பில் தெளிவுபடுத்தல்!

கொழும்பு, நவ. 05

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முறைமை தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.**

பொலநறுவை, மொனராகலை மற்றும் கேகாலை ஆகிய தேர்தல் தொகுதிகளின் ஒருபக்கத்தில் மாத்திரம் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், நாட்டின் ஏனைய தொகுதிகளில் வாக்குச் சீட்டுகள் இரண்டு பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்கை அளிக்கலாம் என்பதுடன், அதனை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சை குழுவுக்கு அளிக்க முடியும்.

வாக்களிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேச்சை குழுக்களின் பெயர் மற்றும் சின்னத்துக்கு முன்னால் உள்ள வெற்று பெட்டியில் புள்ளடியிட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள் 3 பேருக்கு மாத்திரம் விருப்பு வாக்கை அளிக்க முடியும். அதற்காக வாக்குச்சீட்டில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள விருப்பு இலக்கத்துக்கு புள்ளடியிட முடியும் - என்றும் கூறப்பட்டுள்ளது.

(ஐ)

## பெரிய வெங்காயம் விலை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 05

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 340 ரூபாயாக விற்பனையாகின்றன.

பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி விசேட பண்டவரி அண்மையில் 20 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதனால், முன்னர் 10 ரூபாயாக இருந்த 30 ரூபாயாக அதிகரித்தது.

இந்தநிலையில், கேள்விக்கு ஏற்ற வகையில் பெரிய வெங்காயத்தின் கையிருப்பு சந்தையில் இல்லாததாலேயே விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

(ஐ)

## மோசடி செய்த நபர் கைது!

கொழும்பு, நவ. 05

அவுஸ்திரேலியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்தார் என்று கூறப்படும் சந்தேகநபர் ஒருவரை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மொறட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் வசிக்கும் 64 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

## ஜனாதிபதி வேட்பாளர்கள் சிலரின் செலவு அறிக்கைகள் தவறானவை!

கொழும்பு, நவ. 05

ஜனாதிபதித் தேர்தலில் பிரசார செலவு அறிக்கையை வழங்கியிருந்த வேட்பாளர்களுள் அநேகமானோர் வழங்கிய அறிக்கைகள் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைய இல்லை என்று என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகமான வாக்குகளை பெற்று முன்னிலையில் இருக்கும் வேட்பாளர் ஒருவரும் அதில் உள்ளடங்குகிறார் என்றும் அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் செலவு அறிக்கைகளை பவ்ரல் அமைப்பு பரிசீலித்து வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் விதிமுறைக்கு ஏற்ற விதத்தில் அறிக்கைகளை வழங்கியுள்ளவர்களை அடையாளம் காணக்கூடியதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், செலவின அறிக்கைகளை வழங்காமல் இருக்கும் வேட்பாளர்கள், விதிமுறைக்கு உள்ளடங்கும் வகையில் அறிக்கைகளை வழங்காத வேட்பாளர்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸாருடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களுள் 35 பேர் செலவு அறிக்கைகளை வழங்கியுள்ள நிலையில் ஒருவர் மாத்திரம் வழங்கப்பட்ட கால அவகாசத்தின் பின்னர் அறிக்கையை வழங்கியுள்ளார். ஏனைய இருவரும் இதுவரையில் செலவு அறிக்கை வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அரசாங்கத்துக்கு வேலையில்லை; பழைய கோப்புகளை தூக்குகிறது

**மகிந்த ராஜபக்ஷ சாடல்**



கொழும்பு, நவ. 05

அரசாங்கத்துக்கு வேறு வேலையில்லாமல் பல குற்றச்சாட்டு சுமத்தி விசாரணைகளை நடத்தி வருகின்றது. செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தாலும் அதனை விட்டு விட்டு இவற்றை செய்கின்றது. பழைய கோப்புகளை தூக்கிக் கொண்டு சுற்றுகிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

எனது பாதுகாப்பில் நான் அதிக கவனம் செலுத்துவதில்லை. அரசாங்கம் எனக்கான பாதுகாப்பை குறைத்தாலும் மக்கள் என்னை பாதுகாத்துக் கொள்வார்கள். அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து நான் அதிருப்தி அடையவில்லை. தற்போதைய அரசாங்கம் எனது குடும்பத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசாரணைகளுக்கு ஆதரவளிப்பேன்.

அரசாங்கத்துக்கு வேறு வேலையில்லாமல் பல குற்றச்சாட்டு சுமத்தி விசாரணைகளை நடத்தி வருகின்றது. செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தாலும் அதனை விட்டுவிட்டு இவற்றை செய்கின்றது. பழைய கோப்புகளை தூக்கிக் கொண்டு சுற்றுவதை விட்டுவிட்டு மக்களின் வாழ்க்கை சுமையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

## பிரச்னைகளுக்கு தீர்வின்றேல் இன்று முதல் வேலை நிறுத்தம்

**ரயில் நிலைய அதிபர்கள் சங்கம்**

கொழும்பு, நவ. 05

தமது பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தொழிற் சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு கோரி ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

ரயில் திணைக்களம் குறித்த பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதாகக் கூறுகின்ற போதிலும், வேறு சில காரணங்களால் காலம் தாழ்த்தப்படும் நிலை காணப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் இன்று முதல் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## ஓட்டோ விபத்தில் ஐவர் படுகாயம்!

நுவரெலியா, நவ. 05

மண்மேட்டில் மோதுண்டு முச்சக்கரவண்டி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்தனர்.

நானுஓயா கிளாசோ ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், முச்சக்கர வண்டியில் பயணித்த ஐந்து பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## மிதிகம துப்பாக்கிச்சூடு; 8 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, நவ. 05

மாத்தறை - மிதிகமவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று தொடர்பில் 8 சந்தேக நபர்களை மாத்தறை வலய குற்ற புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் 19ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் வெல்லவாய, அஹங்கம மற்றும் மிதிகம ஆகிய பகுதிகளில் வைத்து மாத்தறை குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் நேற்று கைது செய்தனர்.

அத்துடன், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதன் பின்னர், துப்பாக்கியை எடுத்துச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ)

## பதுளை விபத்துக்குள்ளான பஸ் அதிகாரிகளால் இன்று சோதனை!

கொழும்பு, நவ. 05

பதுளையில் விபத்துக்குள்ளான பேருந்தை இன்றைய தினம் மோட்டார் வாகன அதிகாரிகள் சோதனையிடவுள்ளனர்.

கொத்தலாவல பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த பேருந்து கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இரு மாணவிகள் உயிரிழந்தனர். 39 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில், பேருந்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இயந்திரக் கோளாறாலா அல்லது சாரதி கவனக்குறைவால் வாகனம் செலுத்தியமையாலா வாகன விபத்து ஏற்பட்டது என்பது குறித்து பொலிஸார் விசாரணை களை நடத்தி வருகின்றனர்.

விபத்துக்கான சரியான காரணத்தை கண்டறிய சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையையும் பொலிஸார் கோரியுள்ளனர்.

இதனிடையே, மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் இன்றைய தினம் பேருந்தை சோதனையிடவுள்ளனர் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## வீசா இன்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் கைது

கண்டி, நவ. 05

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கண்டி, பூவெலிகட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.


22 வயதுடைய இத்தாலிய பிரஜையும் 32 வயதுடைய பிரித்தானியப் பிரஜையுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீதரன் விரைவில் முகவரியற்று போவார்!

## தவராசா சொல்கிறார்



கொழும்பு, நவ. 05

**பாராளுமன்ற உறுப்பினர் ஆசை இருந்தால் 14 வருடங்கள் தமிழ் அரசுக் கட்சியில் இருந்திருக்க மாட்டேன். சிறீதரன் விரைவில் முகவரி அற்றுப் போய்விடுவார் கே. வி. தவராசா.**

சனநாயக தமிழரசு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டை ஆட்சி புரிந்த ஜனாதிபதிகளாக இருந்தாலும் பிரதமர்களாக இருந்தாலும் தெக்கின் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருந்தாலும் சரி அனைவரையும் எனக்கு தனிப்பட்ட முறையில் நன்கு தெரியும். எனக்கு அவ்வாறு ஆசை இருந்திருக்க வில்லை. தமிழ்த் தேசியத்தை கட்டிக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம். தந்தை செல்வாவின் மறைவு நிகழ்வில் கொடிகள் கட்டியபோது எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தில் தமிழ் அரசு கட்சியில் இணைந்தேன். 14 வருடங்கள் பயணித்தேன். பல்வேறு தவறுகளை தலைவருக்கு சுட்டிக்காட்டினேன். ஆனால், எவையும் நிவர்த்தி செய்யப்படவில்லை.

தமிழ்த் தேசியத்தை அழிக்கும் செயல்பாடு கட்சிக்குள் இடம்பெற்று வருகின்றமையை தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தால் கட்சியிலிருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. தமிழ் அரசு கட்சியில் இருந்த சிறீதரனும் எம்மோடு சேர்ந்து விலகியிருக்க வேண்டும். ஆனால், அவர் அதனை செய்யவில்லை. விரைவில் அவர் முகவரி அற்றுப் போய்விடுவார் -என்றார். (ஐ)

# போரில் உயிரிழந்தோருக்கு பொதுவான நினைவுத்தூபி!

## சொந்த செலவில் அமைக்க அங்கஜன் தயாராம்!



யாழ்ப்பாணம், நவ. 05

போரில் உயிரிழந்தோருக்கு எனது சொந்தச் செலவில் பொது நினைவுத்தூபி அமைக்கத் தயார் என்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

நீண்டகால உள்நாட்டு போரால் மக்கள் பலரை இழந்து விட்டோம்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை மற்றும் சம உரிமை கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் போர் உருவாகி பலரையும் காவுகொண்டுவிட்டது.

இந்த யுத்தத்தால் தமிழ் மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் மௌனித்து 15வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தமிழ் மக்கள் யுத்த வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர். அத்தோடு, தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவுகூருவது கூட சவால் நிறைந்ததாகவே உள்ளது.

இந்நிலையில் பொதுவான நினைவுத்தூபி ஒன்றை அமைத்து போரில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்த செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவுவேன் - என்றார். (ஐ)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரசார பொதுக்கூட்டம் வவுனியாவில்



வவுனியா, நவ. 05

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரசார பொதுக்கூட்டம் வவுனியா குருமண்காட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கலைமகள் விளையாட்டு மைதானத்தில் முன்னணியின் வன்னி மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளர் எஸ். தவபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பெருமளவான ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# கொலை, கொள்ளைக்காரர்களை விரட்டி வீடு புனிதமடைந்துள்ளது

## தமிழ் அரசு வேட்பாளர் பிரகாஷ்



யாழ்ப்பாணம், நவ. 05

கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் விரட்டி அடித்து வீடு சுத்தமாக்கப்பட்டுள்ளது - வீடு புனிதமடைந்துள்ளது - இவ்வாறு கூறியுள்ளார் அந்தக் கட்சியின் வேட்பாளர் தி. பிரகாஷ்.

சுன்னாகத்தில் மக்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச இயந்திரத்தால் தமிழர் ஒற்றுமையைக் குலைப்பதற்காக புதுப்புது கட்சிகள், சுயேச்சை குழுக்கள் என்று இறக்கப்பட்டிருக்கலாம். அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து எமது மக்கள் அதனை முறியடித்து, ஒற்றுமையாக - ஓரணியாக தமிழ்த் தேசமாக எமது தேசியத்துக்குரிய உரிமையை தீர்மானிக்கப்போவது உங்கள் வாக்குகள் தான்.

மக்களின் எதிர்பார்ப்புப்படி படித்த - ஆளுமையுடைய - இளைஞர்களை இந்த முறை வேட்பாளர்களாக நிறுத்தி மக்களின் எதிர்பார்ப்பை இலங்கை தமிழ் அரசுக் கட்சி பூர்த்திசெய்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்பை கட்சி நிறைவு செய்ததால் தமிழ் மக்கள் ஓரணியாகத் திரண்டு யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங்களில் 10 ஆசனங்களை தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# பெண்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே கோரிக்கை

## தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர்

யாழ்ப்பாணம், நவ. 05

பெண் என்பதற்காக சலுகையாக அரசியலுக்குள் வரவில்லை. நாங்கள் சலுகை தேவை எனக் கேட்கவில்லை. பெண்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை என தமிழர் விடுதலை கூட்டணியின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர் கௌரி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களிடம் பேசிய அவர்,

அரசியலில் பெண்களின் பங்களிப்பு 50 வீதம் உறுதி செய்யப்பட வேண்டும். ஆயுத போராட்ட காலத்தில்கூட 50 சத வீத பெண்களின் பங்களிப்பு இருந்த நிலையில் அரசியலில் ஏன் இல்லாமல் போனது? இது மிக மனவேதனைக்குரிய விடயமாகும்.

53 சதவீத பெண்கள் இருக்கும்போது, பெண் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது? இந்த நிலையில்தான் தமிழர் விடுதலை கூட்டணியினர் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளார்கள். அதனால் அவர்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறேன் - என்றார்.

# புதிய புதிய சின்னங்களில் வருவோரை நிராகரியுங்கள்!

## தமிழ் அரசுக் கட்சி கோருகிறது



மட்டக்களப்பு, நவ. 05

புதுப்புது சின்னங்களில் வருபவர்களை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளர் தி. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - கல்லடியில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த முறை பொதுமக்கள் மத்தியில் ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அனைவரும் தமிழ் அரசு கட்சிக்கு வாக்களித்து சிறந்த வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக முன்வந்துள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும்.

தேசிய கட்சிகள், தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளை குறைப்பதற்காக திட்டமே வடக்கு, கிழக்கில் அதிகமாக களமிறக்கப்பட்டுள்ளனர். எனவே, இத்திட்டத்தை முறியடிக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தேர்தலில் வாக்குகளை பிரிக்காமல் சிதறவிடாமல் தமிழ் அரசு கட்சிக்கு பலமான ஆதரவளித்து வாக்களித்து அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் - என்றார். (ஐ)

# வன்னி மாவட்ட மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்!

## சிறீரங்கா கூறுகிறார்

முல்லைத்தீவு, நவ. 05

வன்னி மாவட்ட தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிடும் சிறீரங்கா கூறியுள்ளார்.

முல்லைத்தீவில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுவாக அரசியல்வாதிகளால் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் தங்களது பிள்ளைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டிய நேரம் இதுவாகும். எங்களது சமூகத்தை இலக்கு வைத்து பலர் போலி வாக்குறுதிகளை வழங்கி, வாக்கு சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றனர்.

அவர்கள் எமது தமிழ்ச் சமூகத்தை வியாபார பொருளாகவும் பயன்படுத்துகின்றனர். இறுதியில் வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மாற்றம் [illegible] ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமது குடும்ப உறவுகளை எம். பிக்கள் தனிப்பட்ட பணியாளராக்க முடியாது!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, நவ. 05

**புதிய அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை தனிப்பட்ட பணியாளர்களாக நியமிக்க முடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



கம்பஹாவில் தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியினர் ஏற்பாடு செய்த பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்றத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் குறைக்கப்படும். உத்தியோக பூர்வ இல்லங்கள் உட்பட ஏனைய வசதிகள் மட்டுப்படுத்தப்படும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை தங்களின் பணியாளர்களாக நியமிக்க முடியாது. ஏற்றுக்கொள்வதற்கு - தாங்கிக் கொள்வதற்கு கடினமான விடயமாக ஊழலின் முடிவு காணப்படலாம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பிரித்தானிய உயர்ஸ்தானிகரை நாட்டுக்கு திரும்ப பணித்துள்ளேன்

## ஜனாதிபதி அநுரகுமார

கண்டி, நவ. 05



பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித பொகொல்லாஹம நாட்டுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணிபுரிந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டை தொடர்ந்தே உயர்ஸ்தானிகரை இலங்கைக்கு மீள அழைத்துள்ளதாக தேர்தல் பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை அனுமதிக்கமாட்டோம். அரசியல் நியமனங்களை அனுமதிக்க மாட்டோம். தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மாத்திரமல்லாமல் தூதரக பணியாளர்கள் பலரும் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மீள அழைக்கப்பட்டவர்களில் அநேகமானவர்கள் அரசியல்வாதிகளின் குடும்பத்தவர்கள் என்றும் ஜனாதிபதி கூறினார்.

# அரசியல் சிதைப்பிலிருந்து நாட்டை மீட்க எம்முடன் சேர்க

## சர்வஜன அதிகாரம் கட்சி

கொழும்பு, நவ. 05



தற்போதைய அரசியல் சிதைப்பிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு சர்வஜன அதிகாரத்துடன் இணைந்து கொள்ளுங்கள் என்று அதன் தலைவர் திலித் ஜயவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மஹர பிரதேசத்தில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "3 சதவீத வாக்குகளைபெற்ற தேசிய மக்கள் சக்தி இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளது. தலைவர் ஒருவரை கண்டறிய முடியாத கட்சியாக சிலிண்டர் கட்சி உள்ளது.

மறுபுறம் வெற்றி பெறும் சஜித், இன்று தோல்வியடைந்த சஜித். அடுத்தது மொட்டு கட்சியின் வாலே எஞ்சியுள்ளது. மறுபுறம் மைக், உரிமையாளரின் பெயரை சொல்ல முடியாது. அந்தக் கட்சிக்கு நிதி கிடைக்கும் விதம் தொடர்பிலும் அறிய முடியாத நிலை.

எனவே, அரசியல் சிதைப்பிலிருந்து விடுபட சர்வஜன அதிகாரத்துடன் சேருங்கள். துணிச்சலான எதிர்கட்சியாக எம்மை தேர்ந்தெடுங்கள் - என்றார். (ஐ)

# அனுபவம்மிக்கவர்களையே மக்கள் எம். பிக்களாக தெரிவு செய்யவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தியும் சொல்கிறது!

கொழும்பு, நவ. 05

இளைஞர், யுவதிகள் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய பாராளுமன்றத்துக்காவது அனுபவம் மிக்கவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கடந்த தேர்தல்களில் கொலை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைக்கூட மக்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்திருந்தனர். எனவே, இம்முறை அவ்வாறான தவறான தெரிவுகளுக்கு செல்வதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இளைஞர், யுவதிகள் மாற்றம் வேண்டும் என சிந்திக்கின்றனர். அதற்கமைய பெரும் எதிர்பார்ப்புகளுடனேயே அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தனர். ஆனால், அந்த எதிர்பார்ப்புகள் தற்போது இழக்கப்பட்டுள்ளன. எதிர்கால சந்ததியினரின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கு அனுபவமும் கல்வியறிவும் உள்ளவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும். அரச ஊழியர்களுக்கு சந்தைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும்போது மூளைசாலிகள் வெளியேற்றம் நடக்காது. அரச ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவர். இது குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனம் செலுத்துவது சிறந்தாகும் - என்றார்.

# நாட்டை சீரழித்த அனுபவசாலிகளை ஆட்சிக்கு தெரிவு செய்ய வேண்டாம்!

## தேசிய மக்கள் சக்தி பதிலடி

கொழும்பு, நவ. 05

"76 வருடங்களாக நாட்டை திவாலாக்கி - சீரழித்த அனுபவசாலிகள் என்று அழைக்கப்படுபவர்களை இனி ஆட்சிக்கு தேர்ந்தெடுக்க வேண்டாம்", என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"அனுபவம் வாய்ந்தவர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யாவிட்டால் நாடு கொத்தலாவல பல்கலைக்கழக பஸ் போன்று விபத்துக்கு உள்ளாகும்", என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அவருக்கு பதிலளிக்கும் விதமாகவே தேசிய மக்கள் சக்தி மேற்கண்டவாறு கூறியுள்ளது.

பதுளையில் நடந்த பிரசார கூட்டம் ஒன்றிலேயே தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அனுபவமுள்ளவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று ரணில் சொல்வதைக் கேட்டேன். சாரதியின் தவறால் ஏற்பட்ட விபத்தைப் போன்று அனுபவமுள்ளவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகாவிட்டால் நாடு கொத்தலாவல பல்கலைக்கழக பேருந்தைப் போல் நொறுங்கும் என ரணில் சொன்னதைக் கேட்டேன்.

அவர்களிடம் நாடு கொடுக்கப்பட்டது. 76 வருடங்களாக நாட்டை திவாலாக்கி - சீரழித்தனர். நாட்டை திவலாக்கிய அனுபவம் வாய்ந்த ஓட்டுநர்களுக்கு மக்கள் ஒருபோதும் இனி அதிகாரத்தைக் கொடுக்க மாட்டார்கள்,"" என்றார். (ஐ)

# சிஸ்டம் சேஞ்ச் ஜே. வி. பியில் மாத்திரமே நிகழ்ந்துள்ளது!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, நவ. 05

"சிஸ்டம் சேஞ்ச்" என்ற முறைமை மாற்றம் ஜே. வி. பியில் மாத்திரமே நிகழ்ந்துள்ளது என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்குளியில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக மேடைக்கு மேடை நாட்டு மக்களுக்கு பெரும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தினார். ஆட்சிக்கு வந்த பிறகு வரியைக் குறைப்பதாகக் கூறியபோதிலும் தற்போது அதனை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்ற போதிலும், அந்தப் பேச்சுக்களின் பின்னர் ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்திடம் அடிபணிந்துள்ளார்.

அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடத் தொடங்கியுள்ளார். முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறினாலும், இதுவரை குறித்த முறைமை மாற்றம் நிகழவில்லை - என்றார். (ஐ)

# ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை வட, கிழக்கில் மேற்கொள்ளாதது ஏன்?

## சிவாஜிலிங்கம் கேள்வி

கொழும்பு, நவ. 05

தெற்கில் மேற்கொள்ளப்படும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை அரசாங்கம் வடக்கு - கிழக்கில் ஏன் முன்னெடுக்க வில்லை? - என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் எம். கே. சிவாஜிலிங்கம்.

நேற்றைய தினம் பருத்தித்துறையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இதன்போது, அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெற்கில் மேற்கொள்ளப்படும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை வடக்கு - கிழக்கில் ஏன் முன்னெடுக்கவில்லை. வடக்கில் கடந்த ஆட்சியின்போது அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அங்கயன் இராம நாதன் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டுள்ள னர்.


தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளுக்கு அனுமதி கொடுத்து ஊழலில் ஈடுபட்டுள்ளார். இதற்கு நடவடிக்கை இல்லையா? இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வதற்கு சரவதேச விசாரணையே தேவை.

எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை நாம் ஒற்றுமையாகச் செயல்பட்டு நிலை நாட்ட வேண்டும். சங்கு சின்னத்தை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா கட்சி வேட்பாளரின்மீது பிள்ளையான் தரப்பு தாக்குதல்!

## வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் மூவர் படுகாயம் நால்வர் பொலிஸாரால் கைது



மட்டக்களப்பு, நவ. 05

**மட்டக்களப்பில் விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா) கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது சிவநேசதுரை சந்திரகாந்தனின்(பிள்ளையான்) கட்சி ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.**

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஜெயந்திபுரம் பகுதியில் இடம்பெற்றதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கூறினர்.

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பாடசாலை வீதியில் கருணாவின் ஜனநாயக முன்னணி கட்சியின் வேட்பாளரின் காரியாலயத்தின் முன்பு உள்ள வீதியில் ஆதரவாளர்களுடன் பேசிக் கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் அந்த பகுதிக்கு வந்த 6 பேர் கொண்ட குழுவினர் மதில்களில் ஒட்டப்பட்டிருந்த கருணாவின் கட்சி வேட்பாளர்களது சுவரொட்டிகளுக்கு மேல் பிள்ளையானின் கட்சி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.


இதன்போது கருணா தரப்பின் வேட்பாளர் சென்று எங்கள் சுவரொட்டிகளுக்கு மேல் சுவரொட்டிகளை ஒட்டவேண்டாம் என்று தெரிவித்த நிலையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இதனையடுத்து கருணா தரப்பின் ஆதரவாளர் படுகாயமடைந்ததையடுத்து பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் நால்வர் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)



# பதில் பொலிஸ்மா அதிபர் திருகோணமலைக்கு வருகை

திருகோணமலை, நவ. 05

புதிதாக நியமனம் பெற்ற பதில் பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய திருகோணமலை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

இந்த பயணத்தின் போது கந்தளாய் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த அவர் அங்கு அமைக்கப்பட்ட தொழில்நுட்ப கூடம், உடற்பயிற்சி நிலையம் மற்றும் கேட்போர்கூடம் என்பனவற்றை திறந்து வைத்தார்.

இதேபோன்று பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு மற்றும் இதர விடயங்களையும் பதில் பொலிஸ்மா அதிபர் கேட்டறிந்தார். (எ)


# மட்டு. போதனா மருத்துவமனையில் சத்திர சிகிச்சை பிரிவு திறக்கப்பட்டது



மட்டக்களப்பு, நவ. 05

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர், மருத்துவர் பி. ஜி. மஹிபால ஆகியோர் இணைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் புதிய சத்திர சிகிச்சை பிரிவை நேற்றுத் திறந்து வைத்தனர்.

300 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இந்திய நிதி உதவியின் கீழ் இந்த புதிய சத்திர சிகிச்சை பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (எ)



தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்

# அமைதியாக நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு

தம்பலகாமம், நவ. 05


பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதியின் கண்காணிப்பின் கீழ் தபால் மூல வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றது.

பிரதேச செயலகத்தின் 116 உத்தியோகத்தர்கள், நீர்வழங்கல் சபையின் 05 உத்தியோகத்தர்கள், கால்நடை திணைக்களத்தின் 02 உத்தியோகத்தர்கள் என மொத்தமாக 123 வாக்காளர்கள் இத்தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றிருந்தனர்.

சுமூகமான முறையில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பின்போது அதனைக் கண்காணிக்க பவ்ரல் அமைப்பு மற்றும் அரச கண்காணிப்பினரும் சமுகமளித்திருந்தனர். (எ)

# கந்தபுராண அமிர்தம் நூல் வெளியீட்டு விழா



திருக்கோவில், நவ. 05

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி கோவில் முன்னாள் வண்ணக்கர் கலாபூஷணம் தம்பி முத்து மகேந்திரா எழுதிய "கந்த புராண அமிர்தம்" என்ற நூல் வெளியீட்டு விழா திருக்கோவில் ஆலயத்தில் நடைபெற்றது.

# பல்லாயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக கடற்றொழில்

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

திருகோணமலை, நவ. 04

வரலாற்று ரீதியாக இலங்கையின் மீனவ சமூகத்தின் தாயகமாக சிறந்து விளங்கும் திருகோணமலை நகரத்தில் மீன்பிடித்தல் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல, ஒரு வாழ்க்கை முறையாகும். பழங்கால பாரம்பரியமாக செய்துவரும் இத்தொழில் மூலம் பல்லாயிரம் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்குகிறது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இந்தியாவின் நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் இந்திய தூதரகத்தால் திருகோணமலையிலுள்ள 21 ஆழ்கடல் மீன்பிடி மீனவ சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு திருகோணமலை திருக்கடலூர் மீனவர்கள் வர்த்தக சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மீனவர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பகுதி மக்களுக்கு உணவு, வருமானம் மற்றும் தேவைகளுக்கான நம்பிக்கையை கடல் வழங்கியுள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய பெரிய அபிவிருத்தி ஒத்துழைப்பு உதவிகளின் வரிசையில், இந்த நாட்டின் மீனவ சமூகத்தை ஆதரிப்பதும், ஊக்குவிப்பதும், மேம்படுத்துவதற்குமான எமது முயற்சி முக்கிய இடத்தில் உள்ளது. 2009 - 2010 ஆம் ஆண்டு உள்நாட்டு ஆயுத மோதலை அடுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த மீனவர்கள் உள்ளிட்ட மீனவர்களுக்கு கடந்த காலங்களில் மீன்பிடி உபகரணங்களை வழங்கிய பல நிகழ்வுகளும் இதில் அடங்கும்.

இன்று உங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், கடின உழைப்பாளிகளான திருகோணமலை மீனவர்களுக்கு, அபிவிருத்தி உதவிப் பொதியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உதவித் தொகுதியில், படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரம், பிடித்த மீன்களை பாதுகாக்க கூடிய உறைவிக்கும் இயந்திரங்கள் மற்றும் உயிர் காப்பு அங்கிகள் ஆகியவை அடங்கும்.

இவை உங்கள் அன்றாட நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகிய இரண்டையும் மேம்படுத்த உதவும் அத்தியாவசியமான கருவிகள். ஆழமான உறைவிப்பான்கள் உங்களால் பிடிக்கப்பட்ட மீன்களை தரம்கெடாது பேணுவதை உறுதி செய்யும் அதேவேளையில், உங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கும் பங்களிக்கும். கடலில் சிக்கித்தவிக்கும் அல்லது விபத்துகளை சந்திக்கும் மீனவர்களையும் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாப்பாக மீட்பதற்கு அதிக வலுகொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் உயிர் காப்பு அங்கிகள் முக்கியமான ஆதரவை வழங்கும்.

இந்தியாவும் இலங்கையும் நமது கரையோரங்களை இணைக்கும் வரலாறு, கலாசாரம் மற்றும் இந்தியப் பெருங்கடலில் வேரூன்றிய ஆழமான பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.

கடந்த வாரம், இந்தியா - இலங்கை மீன்வளத்துறையின் கூட்டுப் பணிக்குழுவின் 6வது கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இதில் இரு தரப்பினரும் மீனவர்கள் தொடர்பான அனைத்து பிரச்னைகளையும் விரிவாக ஆய்வு செய்தனர்.


இலங்கையில் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவத்தையும், மீனவர்களாகிய நீங்கள், இயற்கையாலும், சந்தைப்படுத்துவதில் உள்ள விடயங்களாலும், நவீன உபகரணங்களை அணுகுவதன் மூலமும் எதிர்கொள்ளும் சவால்களையும் இந்தியாவில் உள்ள நாங்கள் புரிந்து கொள்கிறோம். இந்த நட்புறவு மற்றும் கூட்டாண்மையின் உணர்வில்தான் இந்தியா இலங்கைக்குத் தேவையான நேரங்களில் தொடர்ந்து துணை நின்றது. இனியும் நிற்கும். இன்றைய உதவி அந்த திசையில் பயணிப்பதற்கான மற்றொரு படியாகும்.

இந்த முயற்சி பொருளுதவி வழங்குவது மட்டுமல்ல, திருகோணமலை மீனவ சமூகத்தின் நிலையான எதிர்கால சமூகங்களை வலுப்படுத்துவதும், அதற்கான முதலீடுகளை செய்வதுமாகும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரான் தாக்குதல் எச்சரிக்கை எதிரொலி

# இஸ்ரேலுக்கு போர் விமானங்களை உடனடியாக அனுப்பிய அமெரிக்கா



டெல் அவிவ், நவ. 05

**ஈரான் தாக்குதல் எச்சரிக்கை விடுத்த நிலையில் இஸ்ரேலுக்கு போர் விமானங்களை அமெ ரிக்கா அனுப்பியுள்ளது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது.**

ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா போராளிகள் செயல்பட்டு வருகின்றனர். லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் ஈரான் ஆதரவு பெற்றதாகும். இதனால், ஹிஸ்புல்லாவினரை குறிவைத்து இஸ்ரேல் நடத்தும் தாக்குதலால் ஈரானும் கோபம் அடைந்துள்ளது. கடந்த மாதம் முதலாம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனையடுத்து ஈரானில் உள்ள 20 இராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் குண்டுமழை பொழிந்தது.

இதனால் இஸ்ரேல் மற்றும் அதற்கு ஆதரவாக உள்ள அமெரிக்காவுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமேனி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த நிலையில் பி - 52 என்ற குண்டுவீச்சு போர் விமானங்கள் உட்பட ஏராளமான ஆயுதங்களை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. இதன்மூலம் ஈரான் தாக்குதல் நடத்தினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழல் நிலவுகிறது. (எ)



# சிரியாவுக்குள் நுழைந்து ஈரான் உளவாளி கைது

## இஸ்ரேல் படையினர் அதிரடி

டமாஸ்கஸ், நவ. 05

இஸ்ரேல் படையினர் சிரியாவுக்குள் நுழைந்து அதிரடி தேடுதல் வேட்டை நடத்தினர். இந்த நடவடிக்கையின்போது ஈரான் உளவாளி ஒருவர் கைது செய்யப்பட்டார். சிரியாவின் டரா நகரம் சைடா கிராமத்தில் தேடுதல் வேட்டை நடத்திய இஸ்ரேல் படையினர் அலி சுலைமான் அல் அசி என்ற நபரை கைது செய்தனர்.

இவர் இஸ்ரேல் இராணுவத்தின் எல்லை நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை சேகரித்து ஈரானுக்கு அனுப்பி வந்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர். (எ)

# தாய்வான் எல்லைக்குள் பறந்த சீனாவின் போர் விமானங்கள்!

தைபே நகரம், நவ. 04

சீனாவுக்கு சொந்தமான 6 போர்க் கப்பல்கள் மற்றும் 37 விமானங்கள் தாய்வான் எல்லையில் கண்டறியப்பட்டன. அவற்றில் 30இற்கும் மேற்பட்ட விமானங்கள் எல்லைக் கோட்டை கடந்து தங்களது வான்பகுதியில் பறந்து சென்றதாக தாய்வான் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனவே, சீனாவின் இந்த அத்துமீறலுக்கு தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சீனாவின் இந்த ஆத்திரமூட்டும் செயலுக்கு தாய்வான் ஜனாதிபதி லாய் சிங்-தே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (எ)



# ஸ்பெயினில் மன்னர்மீது மண்ணை வீசிய மக்கள்!

மட்ரிட், நவ. 05

வெள்ள பாதிப்புகளை பார்வையிடச் சென்ற ஸ்பெயின் மன்னர்மீது பொதுமக்கள் மண்ணை வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஸ்பெயினின் தென்கிழக்கு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஸ்பெயில் உள்ள போரியோடேலா டோரெ மற்றும் வேலன்சியா உள்ளிட்ட நகரங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சுமார் 5 ஆயிரம் வீடுகள் தண்ணீரில் மூழ்கின. கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இந்த நிலையில், வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட பைபோர்ட்டா நகரத்தில், வெள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிடுவதற்காக அந்த நாட்டின் மன்னர் பெலிப்பே




தனது மனைவி ராணி லெட்டிசியாவுடன் சென்றார். அப்போது அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் ஸ்பெயின் மன்னர் மீது மண்ணை அள்ளி வீசினர்.

இருப்பினும் அங்கிருந்த மக்களுடன் நிதானமாக நின்று பேசுவதற்கு மன்னரும், அவரது மனைவியும் முயன்றனர். இதனிடையே பாதுகாப்பு கருதி மன்னரையும், அவரது மனைவியையும் பாதுகாவலர்கள் அங்கிருந்து அழைத்துச் சென்றனர். (எ)

# அமெரிக்காவின் ஜனாதிபதி யார்?

## இன்று வாக்குப்பதிவு



வாஷிங்டன், நவ.05

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் கமலா ஹாரிஸூக்கும் டொனால்ட் ட்ரம்புக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

உலகமே உற்று நோக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸூம், குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

மொத்தம் 16 கோடியே 50 இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்தத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் 7 கோடிக்கும் அதிகமானோர் ஏற்கனவே தங்கள் வாக்கை செலுத்திவிட்டனர்.

எஞ்சியவர்கள் அமெரிக்காவின் 50 மாகாணங்களில் இன்று வாக்களிக்கவுள்ளனர். வாக்குப்



பதிவு முடிந்ததும் உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கிவிடும். பெரியளவில் இழுபறி ஏற்படாவிட்டால் வாக்கு எண்ணிக்கை தொடங்கிய சில மணி நேரத்திலேயே அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது தெரிந்துவிடும். (எ)

# இந்தோனேசியாவில் எரிமலை வெடித்தது

## 9 பேர் உயிரிழப்பு

ஜகார்த்தா,நவ. 05

இந்தோனேசியாவில் எரிமலை வெடித்து 9 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் நுசா டெங்கரா மாகாணத்தின் பிளோர்ஸ் தீவில் எரிமலை உள்ளது. இந்த எரிமலை திடீரென வெடித்து சிதறியது.

இதனால், அப்பகுதியிலுள்ள கிராமங்களை எரிமலையில் இருந்து வெளிவந்த கரும்புகை சூழ்ந்தது. அதேபோல், எரிமலையில் இருந்து தீக்குழம்பும் வெளிவந்தது.

இந்த நிலையில், எரிமலை வெடித்த சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும், சிலர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டனர். அதேவேளை, எரிமலை தொடர்ந்து சீற்றத்துடன் காணப்படுவதால் மக்களை பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டில் டெஸ்ட் தொடரை முழுவதுமாக இழந்த இந்தியா

## 91 ஆண்டுகளில் மிக மோசமான சாதனை

மும்பை, நவ. 05

இந்திய கிரிக்கெட் அணி, டெஸ்ட் போட்டிகளில் 1933ஆம் ஆண்டில் விளையாடத் தொடங்கியது. டெஸ்ட் போட்டிகளில் விளையாடத் தொடங்கி 91 ஆண்டுகளான நிலையில், இந்திய அணி முதன்முறையாக 0 - 3 என்ற கணக்கில் தொடரை உள்நாட்டில் முழுமையாக இழந்துள்ளது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நியூசிலாந்து கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. பெங்களூரு, புனே மற்றும் மும்பை என மூன்று போட்டிகளிலும் அந்த அணி வெற்றி பெற்றது. உள்நாட்டில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை இந்தியா முழுவதுமாக இழப்பது இதுவே முதல்முறை. இந்தத் தொடர் மோசமான சாதனையாக இந்தியாவுக்கு அமைந்துள்ளது.


இதற்கு முன்பு 2000ஆம் ஆண்டில் இந்திய அணி, 0 - 2 என்ற கணக்கில் ஹான்ஸி குரோனியே தலைமையிலான தென்னாபிரிக்க அணியிடம் தொடரை முழுமையாக இழந்திருந்தது.

அதேபோல் 2012இல் இங்கிலாந்து அணியிடம், இந்திய அணி 1 - 2 என்ற கணக்கில் தொடரை இழந்திருந்தது. ஆனால், உள்நாட்டில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகள் கொண்ட தொடரில் முதன்முறையாக இந்திய அணி முழுமையாக தொடரை இழந்துள்ளது.




முதல்முறையாக இந்தியாவுக்கு வந்து விளையாடியுள்ள அணிகளில் தொடரை முழுமையாகக் கைப்பற்றிய அணி என்ற பெருமையை நியூசிலாந்து பெற்றுள்ளது. இதற்கு முன்பு 1958 - 59 இல் மேற்கு இந்திய தீவுகள் அணி 5 போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என வென்றது. ஆனால், இதில் 2 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன. இதன் பின்னர் 1983 - 84 இல் மேற்கு இந்திய தீவுகள் அணி 6 போட்டிகள் கொண்ட தொடரை 3 - 0 என கைப்பற்றியது. இந்தத் தொடரிலும் 3 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன. (எ)

# பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் சம்பியனானார் ஸ்வெரேவ்



பாரிஸ், நவ.05

பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டித் தோடரில் ஜேர்மனி வீரர் ஸ்வெரேவ் சம்பியனானார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்ற பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி பிரான்ஸில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு உலக தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கும் ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மற்றும் தரவரிசையில் 18ஆவது இடத்தில் இருக்கும் பிரான்ஸ் வீரர் ஹூம்பெர்ட் ஆகியோர் முன்னேறினர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இறுதிப்போட்டி நடைபெற்றது.

இதில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஸ்வெரேவ் 6 - 2 மற்றும் 6 - 2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று சம்பியனானார். (எ)

### ஆஸியுடன் கிரிக்கெட் தொடர்:

# போட்டி அட்டவணையை வெளியிட்டது இலங்கை

கொழும்பு, நவ. 05

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போட்டி அட்டவணையை இலங்கை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

2 டெஸ்ட் மற்றும் ஒரு போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி முதல் பெப்ரவரி 13ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த நிலையில், இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி 29 ஆம் திகதியும் 2ஆவது போட்டி பெப்ரவரி 6ஆம் திகதியும், ஒருநாள் போட்டி பெப்ரவரி 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. (எ)


# விருத்திமன் சஹா ஓய்வு

புதுடில்லி, நவ. 05


இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரரான விருத்திமன் சஹா, அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். நடப்பு ரஞ்சி கிண்ண சீசன் தான் அவர் பங்கேற்று விளையாடும் கடைசி தொடர்.

கடந்த 2010இல் இந்திய அணியில் அவர் அறிமுகமானார். மொத்தம் 40 டெஸ்ட் மற்றும் 9 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியுள்ளார்.

40 வயதான சஹா கடைசியாக கடந்த 2021இல் இந்திய அணிக்காக விளையாடி இருந்தார். அதன் பின்னர் இளம் வீரர்களின் வருகை காரணமாக அவருக்கான வாய்ப்பு அணியில் மறுக்கப்பட்டது. கடந்த ஐ.பி. எல். சீசனில் குஜராத் டைட்டன்ஸ் அணியில் விளையாடி இருந்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 1,353 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 3 சதம் மற்றும் 6 அரை சதங்கள் இதில் அடங்கும்.




"அற்புதமான கிரிக்கெட் பயணம் எனக்கு அமைந்தது. நடப்பு ரஞ்சி சீசன் தான் நான் விளையாடும் கடைசி கிரிக்கெட் தொடர். எனது ஓய்வுக்கு முன்பாக பங்களாதேஷ் அணிக்காக ரஞ்சி தொடரில் இறுதியாக விளையாடுவதை எண்ணி பெருமை கொள்கிறேன். இந்த சீசனை மறக்க முடியாத நினைவாக மாற்றுவோம்" என சஹா தெரிவித்தார். (எ)




# ஆஸி. போராடி வெற்றி

மெல்பேர்ண், நவ. 05

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் போராடி வெற்றி பெற்றது.

மெல்பேர்ணில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்த நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 8 விக்கெட்கள் இழப்புக்கு 204 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (எ)

# கும்ப்ளேயின் சாதனையை முறியடித்தார் அஸ்வின்




மும்பை, நவ. 05

மும்பை வான்கடே மைதானத்தில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந் திய வீரர் என்ற அனில் கும்ப்ளேயின் சாதனையை ரவிச்சந்திரன் அஸ்வின் முறியடித்துள்ளார்.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் 3 விக்கெட்களை வீழ்த்தியதன் மூலம் கும்ப்ளேயின் சாதனையை முறியடித்துள்ளார்.

1975 முதல் டெஸ்ட் போட்டிகளை நடத்தி வரும் மும்பை மைதானத்தில் இதற்கு முன் அனில் கும்ப்ளே 7 போட்டிகளில் 38 விக்கெட்கள் எடுத்ததே முந்தைய சாதனையாக இருந்தது. ஆனால், அஸ்வின் 6 போட்டிகளி லேயே 41 விக்கெட்கள் எடுத்து அனில் கும்ப்ளேவின் சாதனையை முறியடித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளை...

காணிகளை விடுவிக்குமாறு கோரி மனு ஒன்றை வழங்கினர்.

இதேபோன்ற மனுவை அவர்கள் வடக்கு ஆளுநர், முல்லைத்தீவு அரச அதிபர் ஆகியோரிடமும் முன்னர் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னார்...

போட்டியிடுபவர்களை ஆதரித்து நடந்த பரப்புரை கூட்டத்தில் பங்கேற்கவே அவர் மன்னார் வந்தார்.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர். இந்த நிகழ்வுக்கு வந்த பொதுமக்களை படைத் தரப்பினர் கடுமையாக சோதித்த பின்னரே அனுமதித்தனர்.

இதேவேளை, பிரதமரின் வருகையை முன்னிட்டு மன்னார் நகரம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இராணுவ...

தெரிவித்தார்.

சிறீஜெயவர்த்தனபுர கோட்டையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"வடக்கிலுள்ள முகாம்களை அகற்றுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா?" என்ற கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"முகாம்களை அகற்றுவதாயின் அதற்கென வழிமுறை உள்ளது. அதற்கமைய முதலில் அச்சுறுத்தல் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அச்சுறுத்தல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இதன்போது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்.

இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் காணப்பட்ட பலாலி வீதியில் வயாவிளான் மத்திய கல்லூரியிலிருந்து அச்சுவேலி - தோலகட்டி சந்தி வரையிலான வீதி சுமார் 3 தசாப்தங்களின் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக கடந்த முதலாம் திகதி முதல் திறக்கப்பட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த மதிப்பீட்டின் பின்னரே அந்த வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையிலேயே முகாம்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் முறையான வழிமுறையை பின்பற்றி எடுக்கப்படும். பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசணையுடன் முப்படையும் பொலிஸாரும் செயல்பட்டு வருகின்றனர் - என்றார்.

இது தொடர்பில் இராணுப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே. ஏ. என். ரசிக குமார தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு தலைமையகத்தால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் மீளாய்வு அறிக்கைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமையவே இந்த வீதி திறக்கப்பட்டது.

இந்த வீதி அதியுயர் பாதுகாப்பு வலயம் ஊடாக சென்றதால் மூடப்பட்டிருந்தது. தற்போது வீதி திறக்கப்பட்டுள்ளதே தவிர, அதியுயர் பாதுகாப்பு வலயம் குறைக்கப்படவில்லை. எனவே, வீதிக்கு வெளியில் செல்ல எவருக்கும் அனுமதி இல்லை. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றும் கூறினார். (ஐ)

## மின்கட்டண...

புதிய பிரேரணையை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இதற்கமைய, மின்சார கட்டணத்தை 4 முதல் 11 சதவீதம் வரை குறைப்பதற்கு கடந்த மாதம் 24ஆம் திகதி இலங்கை மின்சார சபை, பிரேரணை ஒன்றை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இணையம்...

குடிவரவு - குடியகல்வு திணைக்கள பணிப்பாளர் நிலுஷா பாலசூரிய நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொதுமக்கள் தமது தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான திகதியை முன்பதிவு செய்ய முடியும்.

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு மக்கள் தங்கள் சந்திப்புகளை முன்பதிவு செய்ய இந்த அமைப்பின் மூலம் டோக்கன்கள் வழங்கப்படும்.

திணைக்களத்தின் இணையத்தில் இடதுபக்கத்தில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க பதிவு செய்யுங்கள் என்ற பிரிவு உள்ளது. இதில் பதிவு செய்வதன் மூலம் டோக்கனை பெறலாம். ஒவ்வொரு நாளும் வரையறுக்கப்பட்ட டோக்கன் வழங்கப்படும்.

தொலைதூரத்திலிருந்து வந்து திணைக்களத்துக்கு வெளியே வரிசையில் காத்திருக்கம் மக்களை கருத்தில் கொண்டே இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் 01ஆம் திகதி முதல் இணையம் மூலம் டோக்கன்களை பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வேறு...

திஸநாயக்க பதவியேற்ற பின்னர் பல வருட காலமாக மூடப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகையின் சுற்றுவட்ட வீதி, மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. வயாவிளான் - அச்சுவேலி வீதியும் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல வீதிகளை, மக்கள் பயன்பாட்டுக்காக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. தற்போது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தாம் திசைகாட்டி சின்னத்துடன் இணைந்து பயணிக்கவுள்ளனர் என்றும் தம்மை பாராளுமன்றம் அனுப்புமாறும் கூறி வருகின்றனர். சில முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து வரும் நிலையில் அவர்களும் இவ்வாறே கூறி வருகின்றனர். தாம் அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்க உள்ளனர் என்றும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளன என்றும் கூறி வருகின்றனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், 25 பேர் மாத்திரமே அமைச்சுப் பதவிகளை வகிப்பார்கள். அவர்கள், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாகவே இருப்பர். இதனைவிட, வேறு எவரையும் எமது கட்சியில் இணைத்துக்கொள்ளவோ, அவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதற்கோ தயாராக இல்லை.

வடக்கு மாகாணத்திலும் சரி இலங்கையின் எந்தப் பாகத்திலும், போதைப் பொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்து எமது பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் எதிர்காலத்தை அழித்து வருகின்றனர். எமது அரசாங்கத்தில், இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்படும் - என்றார். (ஐ)

# பொலிஸ் அதிகாரி மீது வாள்வெட்டு தாக்குதல்

கொழும்பு, நவ. 05

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தினார் என்று கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை - பாணந்துறை எலுவில பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை தெற்கு பொலிஸ் போக்குவரத்து பிரிவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரி ஒருவரே காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பொலிஸ் அதிகாரி பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாளும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மாடுகளை திருடிச் சென்றோர் கைக்குண்டுடன் கைதாகினர்!

கொழும்பு, நவ. 05

அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹெர பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றிலிருந்து இரண்டு மாடுகளை திருடிச் சென்றதாகக் கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகம்வெஹெர பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீரவில, பந்தகிரிய மற்றும் லுணுகம்வெஹெர ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட இரண்டு மாடுகளும் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்று திங்கட்கிழமை திஸ்ஸமஹாராமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 05

நாட்டின் பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பதுளை, காலி, களுத்துறை, கண்டி, குருநாகல், மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திட்டமிட்ட...

எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் நாம் சிறீலங்கா அமைப்பின் இணைப்பாளர் கடந்த ஒக்ரோபர் 21ஆம் திகதி அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்தமன் சூரசேன, ஷிரான் குணரத்ன, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக தேர்தல் திகதியை ஜனாதிபதி உரிய முறையில் நிர்ணயித்துள்ளார் என்று சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன நீதியரசர்களுக்கு அறிவித்தார்.

1988ஆம் ஆண்டின் தேர்தல் திருத்தச் சட்டத்தின் 10ஆவது பிரிவுக்கு அமைய, தேர்தலை நடத்த உத்தேசிக்கப்படும் திகதி, வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் பணிகள் நிறைவடையும் தினத்திலிருந்து கணக்கிடப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், தற்போது தேர்தல் தொடர்பான செயல்பாடுகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளமையால் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மன்றில் கூறினார்.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்ட நீதியரசர்களின் ஆயம் மனுவைத் தள்ளுபடி செய்தது. (ஐ)

# ஏ.கே. 47 துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 05

ஏ. கே. 47 துப்பாக்கி மற்றும் இரு வாள்கள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டியில் விசேட அதிரடிப்படையினர் நேற்று திங்கட்கிழமை நடத்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரிடமிருந்து ஏ. கே. 47 ரக துப்பாக்கி, இரண்டு வாள்கள், கத்தி உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஓ.எல்...

அத்துடன், நிகழ்நிலை முறைமை ஊடாக மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து பாடசாலை விண்ணப்பதாரிகளும் தங்கள் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாகவும் தனியார் விண்ணப்பதாரிகள் தாமாகவும் இணையம் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic ஆகியவற்றில் விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தல்களை கவனமாக படித்து அதற்கமைய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வாகன இறக்குமதியை அனுமதித்தால் சமாளிப்பதற்கு மத்திய வங்கி தயார்!

## அதன் ஆளுநர் நந்தலால் வீரசிங்க

கொழும்பு, நவ. 05

**அரசாங்கம் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துமாக இருந்தால், அதனைச் சமாளிக்கத் தயார் நிலையில் இருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் தீர்மானத்தை அரசாங்கமும் நிதித்துறை அதிகாரிகளுமே மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான பரிந்துரைகள் மத்திய வங்கியால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் நடப்பு கணக்கில் மிகை நிலையை கொண்டிருந்தது.



அடுத்த ஆண்டு வாகன இறக்குமதி அனுமதி வழங்கப்படுமாக இருந்தால், மத்திய வங்கியின் நடப்பு கணக்கில் சிறியளவான பற்றாக்குறை ஏற்படக்கூடும். ஆனால், அது சமாளிக்கக்கூடியதே என்றும் அவர் கூறினார். (ஐ)

# அயல்வீட்டு சிறுமியை வன்புணர்ந்தவர் கைது

கொழும்பு, நவ. 05

அயல் வீட்டு சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 45 வயது நபரை பொலிஸார் கைது செய்தனர்.

பாலியல் வன்புணர்வுக்கு உள்ளான சிறுமி தனது தாத்தாவின் பராமரிப்பில் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில், தேசிய அடையாள அட்டைக்காக புகைப்படம் எடுப்பதற்காக அவர் அயல் வீட்டாருடன் சேர்ந்து அநுராதபுரம் நகருக்கு சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் சிறுமியுடன் இணைந்து புகைப்படம் எடுத்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் குறித்த புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பதிவிடுவேன் என்று கூறி சிறுமியை மிரட்டி அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்று அவரை வன்புணர்ந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 05

காரும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

களுத்துறை, அகலவத்தை - பதுரலிய வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உயிரிழந்தார். அதன் பின்னிருக்கையில் அமர்ந்தவர் படுகாயமடைந்தார். காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ஜோன்ஸ்டனுக்கு சொந்தமான மற்றொரு காரும் பிடிபட்டது!

கொழும்பு, நவ. 05

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் 'போர்ட்' வகை கார் ஒன்று கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - ஹோமகம - கொட்டாவை - லியங்கொடையில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரை கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் சாரதி ஒருவர் வாகன திருத்துமிடத்தில் கொண்டு வந்து விட்டுள்ளார். அப்போது காரில் இலக்கத் தகடுகள் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தை கொண்டு வந்த சாரதி, கே. எம். 5121 என எழுதப்பட்ட வாகனத்தின் தாள் ஒன்றை தன்னிடம் காட்டினார் என்றும் அதன் பிரகாரம் மேற்படி இலக்கத்தை வாகனத்தின் இலக்கமாக தான் குறிப்பிட்டார் எனவும் வாகன திருத்தகத்தின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

ஆனால், 8 மாதங்களாகியும் குறித்த நபர் வாகனத்தை எடுத்துச் செல்லவில்லை என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் ஹோமகம விசேட குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பராட்டே சட்டம் அமுலால் 127 பேர் உயிர் மாய்த்தனர்

கொழும்பு, நவ. 05

நாட்டின் வங்கிகளால் நடைமுறைப் படுத்தப்பட்ட 'பராட்டே சட்டம்' காரணமாக கடந்த வருடத்தின் தொடக்கத்தில் 127 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் உயிர் மாய்த்தனர் என்று ஒன்றிணைந்த தொழில் முயற்சியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தால் நாட்டிலுள்ள கிட்டத்தட்ட 4 இலட்சம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் ஏற்கனவே, அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், பராட்டே சட்டத்தின் கீழ் சொத்துகள் ஏலம் எடுக்கப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 127 பேர் கடந்த ஆண்டு தொடக்கத்தில் உயிர் மாய்த்தனர். பராட்டே சட்டத்தின் கீழ் சொத்துக்கள் ஏலம் விடப்பட்ட அனைவருக்கும் வங்கிகளில் இருந்து நிவாரணம் கிடைக்கவில்லை.

எங்களுக்கு வழங்கப்பட்டது நிவாரண காலம் மாத்திரம்தான். அதுவும் உண்மையில் ஒரு வட்டி பொறி. தற்போதைய அரசாங்கத்துடன் சில கலந்துரையாடல்களை நடத்தினோம். பராட்டே சட்டம் டிசெம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# லொஹானின் மனைவிக்கும் விளக்கமறியல்

கொழும்பு, நவ. 05

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷிபிரபா ரத்வத்தவை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கங்கொடவில நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தவின் மனைவிக்கு சொந்தமான நுகேகொடை, மிரிஹானை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி மிரிஹானை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கணடியில் வைத்து கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org